
பக்கங்கள் 18

# மாலை முரசு

## உலகத் தமிழர் பேரவையினர் நாளை யாழ்ப்பாணம் விஜயம்



உலகத் தமிழர் பேரவையின் (GTF) உறுப்பினர்கள் நாளை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டு 04

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 கார்த்திகை 21 வெள்ளிக்கிழமை 08.12.2023 அதிர்வு 130



# இன நல்லிணக்கத்துக்கான ‘இமயமலைப் பிரகடனம்’ ஜனாதிபதியிடம் கையளிப்பு

### இலங்கையைக் கட்டியெழுப்பும் ரணிலின் செயற்றிட்டத்தை நேரில் பாராட்டிய உலகத் தமிழர் பேரவையின் பிரதிநிதிகள்



சிறந்த இலங்கைக்கான சங்க அமைப்பின் தேரர்கள் குழுவினர் மற்றும் உலகத் தமிழர் பேரவையின் (GTF) உறுப்பினர்கள் நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தனர். அச்சமோ சந்தேகமோ இன்றி, அனைவரும் பெருமையுடனும், நம்பிக்கையுடனும், சம உரிமையுடனும் அமைதியாக வாழக்கூடிய இலங்கையைப் பற்றிய ‘இமயமலைப் பிரகடனம்’ ஜனாதிபதியிடம் கையளிக்கப் பட்டது. 04

## மாகாண மட்டத்தில் போதுமானளவு அதிகாரப் பகிர்வை உறுதிப்படுத்திய புதிய அரசமைப்பு கட்டாயம் வேண்டும்

### ‘இமயமலைப் பிரகடனம்’ முன்னெடுப்பு அமைப்பினர் கூட்டறிக்கை



மாகாண மட்டத்தில் போதுமானளவு அதிகாரப் பகிர்வை உறுதிப்படுத்தியும், தனிநபர் மற்றும் கூட்டு உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கக்கூடியதுமான புதிய அரசமைப்பை உருவாக்க வேண்டும் என்று சிறந்த இலங்கைக்கான சங்க மன்றத்தினர் மற்றும் உலகத் தமிழர் பேரவை உறுப்பினர்கள் கூட்டாக வலியுறுத்தியுள்ளனர். 05

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally

# தலதா மாளிகையைத் தரிசித்த உலகத் தமிழர் பேரவையினர்







சிறந்த இலங்கைக்கான சங்க அமைப்பின் தேரர்கள் குழுவினர் மற்றும் உலகத் தமிழர் பேரவையின் (GTF) உறுப்பினர்கள் இன்று கண்டி தலதா மாளிகையைத் தரிசித்தனர். அதற்கு முன்பாக அவர்கள், அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடங்களின் மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து, இனங்களுக் கிடையிலான நல்லிணக்கம், மறுசீர மைப்பு, சமூக நலன் மற்றும் அபி விருத்தி ஆகியவற்றை மையமா கக் கொண்ட 6 முக்கிய விடயங் களை உள்ளடக்கிய “இமயமலைப் பிரகடனம்” தொடர்பில் தெளிவுபடுத்தி னர்.



## இலங்கைப் போக்குவரத்துச் சபையின்

# அக்கரைப்பற்றுச் சாலையில் பணிப் பகிஷ்கரிப்புப் போராட்டம்

### போக்குவரத்து கண்காணிப்பு கடமையில் இருந்த உத்தியோகத்தர் தாக்கப்பட்டமையைக் கண்டித்து

**(அபு அலா, அப்துல் ஹமீட்)**

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் அக்கரைப்பற்றுச் சாலையின் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் இன்று காலை முதல் (08) பணி பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். போக்குவரத்து கண்காணிப்பு கடமையில் இருந்த உத்தியோகத்தர் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தங்களுக்கு சரியான தீர்வு கிடைக்கும் வரை இப்போராட்டம் தொடரும் என்று அக்கரைப்பற்று சாலையின் நிர்வாக உத்தியோகத்தர் ஏ.எஸ்.ஹாறூன் தெரிவித்துள்ளார்.

இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் போக்குவரத்து சபை ஆகிய இரு போக்குவரத்து சபைகளும் ஒருங்கிணைந்த சேவைகளை நேர அட்டவணையின் பிரகாரம் முன்னெடுத்து வருகின்றனர். இச்சேவையில் ஈடுபடுகின்ற தனியார் போக்குவரத்து பஸ் சாரதிகளும், நடத்துநர்களும் நேர அட்டவணையின் பிரகாரம் ஒரு போதும் நடப்பதில்லை. இத்தத் தவறுகளை உரியவர்களுக்கு சுட்டிக்காட்டியும் அத்தவறுகளை தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன என்று அக்கரைப்பற்று சாலையின் நிர்வாக உத்தியோகத்தர் ஏ.எஸ்.ஹாறூன் தெரிவித்தார்.

இந்தப் பணிப் பகிஷ்கரிப்புப் போராட்டம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று காலை 7.30 மணிக்கு அம்பாறையிலிருந்து அக்கரைப்பற்று பஸ் தரிப்பிடத்திற்கு வந்தடைய வேண்டிய தனியார் பஸ் ஒன்று, நேரம் தவறி வந்த விடயத்தை இலங்கை போக்குவரத்து அக்கரைப்பற்று சாலையின் போக்குவரத்து கண்காணிப்பு கடமையில் இருந்த உத்தியோகத்தரால் சுட்டிக்காட்டப்பட்ட போது குறித்த பஸ் சாரதியும், நடத்துநரும் அந்த உத்தியோகத்தரைத் தாக்கியுள்ளனர். இத்தாக்குதலில் காயமுற்ற அவர் அக்கரைப்பற்று ஆதார வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்தச் சம்பவத்தை எதிர்த்தும், உரிய சாரதியும் நடத்துநரும் கைது செய்யப்பட வேண்டும் என்று கோரியும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

எங்களுக்குச் சரியான தீர்வு கிடைக்கும் வரை இப்பணி பகிஷ்கரிப்பு போராட்டத்தை கைவிடப்போவதில்லை. இது தொடர்பில் எங்களின் அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளோம்.– என்றார்.

பகிஷ்கரிப்புப் போராட்டத்தால் அம்பாறை, கல்முனை, பொத்துவில், மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற பிரதேசங்களுக்குச் செல்லும் பயணிகள் பாரிய இன்னல்களை எதிர்நோக்கினர்.








# நாடாளுமன்றத்தில் சீனாவை வறுத்தெடுத்த செல்வம் எம்.பி.

(ந.லோகதயாளன்)

“சீனாவின் கப்பல் இலங்கைக்குள் வந்து என்ன ஆராய்ச்சி செய்கின்றது? கடலை ஆழப்படுத்தப் போகின்றார்களா? அல்லது மீன் வகைகளைக் கண்டு பிடிக்கப் போகின்றார்களா?”

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் வன்னி மாவட்ட எம்.பி. செல்வம் அடைக்கலநாதன் கேள்வி எழுப்பினார்.

“சீனாவைப் பொறுத்தவரையில் நிலமாக இருக்கலாம், கடலாக இருக்க லாம், அது தன்னுடைய அதிகாரத்துக்குள் இருக்க வேண்டுமென நினைக்கும் நாடு. எனவே, இந்த விடயத்தில் இந்தியா தனது பாதுகாப்பு தொடர்பில் எழுப்பும் கேள்வி நியாயமானது” – என்றும் அவர் குறிப் பிட்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரை யாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இலங்கை – இந்திய ஒப்பந்தம் தொடர் பில் என்னிடம் சில கேள்விகள் உள்ளன. இந்த ஒப்பந்தத்தில் அடிப்படையிலான மாகாண சபைகள் தற்போது செயலி ழந்துள்ளன.

அவற்றுக்கான தேர்தல் ஒத்திவைக் கப்பட்டுள்ளது. இது தொடர்பில் வெளி நாட்டு அமைச்சு எந்தளவில் அக்கறை கொண்டுள்ளது? இலங்கை – இந்திய ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துகின்ற செயற்பாடுகளை எடுத்துள்ளதா ?

எமது கடற்பரப்பினுள் அத்துமீறும் இந்திய மீனவர்கள் தொடர்பில் நாம் கடற்றொழில் அமைச்சை மட்டும் குறை கூற முடியாது.



இலங்கை – இந்திய மீனவர் பிரச்சினை காலம் காலமாக நீடிக்கின்றது. இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண வெளிநாட்டு அமைச்சுக்கும் பொறுப்புண்டு. அவ்வா றான தீர்வு முயற்சியில் நீங்கள் ஈடுபட்டால் நாம் உங்களுக்கு முழுமையான ஆதரவு தருவோம்.” – என்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இன நல்லிணக்கத்துக்கான...

இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம், மறுசீரமைப்பு, சமூக நலன் மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றை மையமாகக் கொண்ட 6 முக்கிய விடயங்களை “இமய மலைப் பிரகடனம்” உள்ளடக்கியுள்ளது.

இந்தப் பிரகடனத்தை ஜனாதிபதியிடம் கையளித்ததன் பின்னர் இது தொடர்பில் மூன்று நிகாயக்களின் தலைமைத் தேரர்களுடன் கலந்துரையாடுவதாகவும், ஏனைய மதத் தலைவர்களுக்கும் இது குறித்து அறிவிக்கவுள்ளதாகவும் சிறந்த இலங்கைக்கான சங்க அமைப்பின் தேரர்கள் இங்கு குறிப்பிட்டனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

“பல வருடங்களாகப் போரால் பாதிக்கப் பட்ட இலங்கை மக்கள் கடந்த பொருளா தார நெருக்கடிக்கும் முகங்கொடுத்து பெரும் இன்னல்களை எதிர்கொண்டனர். பொருளாதார நெருக்கடியின்போது, எரிபொருளுக்காக வரிசையில் காத்திருக் கும்கசப்பானஅனுபவங்கள்ஒருசிலமாதங் கள் நீடித்தன. ஆனால், இந்த மோசமான நிலைமையை வடக்கு, கிழக்கு மக்கள் பல வருடங்களாக அனுபவித்தனர்.

புதிய நாட்டைக் கட்டியெழுப்பும்போது புதிய பொருளாதாரம் மிகவும் அவசியம். இமயமலைப் பிரகடனம் போன்ற வெளி யீடுகள் முக்கியமானவை. ஒற்றுமை மற்றும் ஸ்திரத்தன்மை இல்லாமல் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டி யெழுப்ப முடியாது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தியைப் பாதித்த பிரச்சினை களைத் தீர்ப்பதற்கு அரசு முன்னெடுத் துள்ள நடவடிக்கைகளில் நல்ல முன் னேற்றம் காணப்படுகின்றது.” – என்றார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்கான எதிர்கால நடவடிக் கைகள் தொடர்பிலும் ஜனாதிபதி இதன் போது தெளிவுபடுத்தினார்.

வடக்கு, கிழக்கு மற்றும் பெருந்தோட் டங்களில் உள்ள பிள்ளைகளின் கல் வியை மேம்படுத்தும் வேலைத்திட்டம், அந்த மாகாணங்களை மையமாக வைத்து நடைமுறைப்படுத்தப்படும் விவசாய நவீனமயமாக்கல் திட்டங்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க வலுசக்தித் திட்டங்கள் குறித்தும் ஜனாதிபதி இதன்போது கருத் துத் தெரிவித்தார்.

இதன்படி, பூநகரி பிரதேசம் எதிர் காலத்தில் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மையமாக மாறும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் சுட்டிக் காட்டினார்.

நாட்டைக் கட்டியெழுப்பும் ஜனாதி பதியின் செயற்றிட்டத்தைப் பாராட்டிய உலகத் தமிழர் பேரவையின் பிரதிநிதி கள், அதற்கு தமது முழுப் பங்களிப்பை வழங்குவதாகவும் தெரிவித்தனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வின் ஆட்சிக்காலத்தில் ‘இமயமலைப் பிர கடனம்’ வெளியிடக் கிடைத்தமை குறித் தும் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

சிறந்த இலங்கைக்கான சங்க அமைப் பைப் பிரதிநிதித்தவப்படுத்தி, அமர புர நிகாயவின் அம்பகஹபிட்டிய பிரி வின் அனுநாயக்க வண. மாதம்பாகம அஸ்ஸஜிதிஸ்ஸ தேரர், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் நீதித்துறை சங்க நாயக்க வண. சியம்பலாகஸ்வெவ விமலசார தேரர், மேல் மாகாணத்தின் பிரதான சங்க நாயக மற்றும் ஸ்ரீ தர்மரக்ஷித பிரிவின் பதிவாளர் வண. கிதலகம ஹேமசார தேரர், வஜிரவங்க பிரிவின் பதில் மகாநாயக்க பேராசிரியர் பல்லேகந்தே ரத்னசார தேரர், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினரும் மனித அபி விருத்தி ஆய்வு மையத்தின் தலைவரு மான வண, களுபஹன பியரதன தேரர், மத்திய மாகாணத்தின் பாததும்பர பிர தம சங்க நாயக வண. நாரம்பனாவே தம்மாலோக தேரர், ராமன்ய நிகாயவின் பிரதிப் பதிவாளர் வாந்துவே தம்மவங்ச தேரர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்ட னர்.

உலகத் தமிழர் பேரவையைப் பிரதி நிதித்துவப்படுத்தி அதன் பணிப்பாளர் பவன் பவகுகன், பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் மற்றும் வேலுப்பிள்ளை குகனேந்திரன், கலாநிதி கண்ணப்பர் முகுந்தன், பிரகாஷ் ராஜசுந்தரம், ராஜ் தவரத்னசிங்கம், கலாநிதி ஜெயராஜா ஆகியோருடன், ஜனாதிபதியின் செய லாளர் சமன் ஏகநாயக்கவும் கலந்து கொண்டனர்.

### உலகத் தமிழர்...

முக்கிய சந்திப்புக்களில் ஈடுபடவுள்ளனர்.

இந்தத் தகவலை உலகத் தமிழர் பேர வையின் பணிப்பாளர் பவன் பவகுகன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

“சிறந்த இலங்கைக்கான சங்க அமைப் பின் தேரர்கள் குழுவினர் மற்றும் உலகத் தமிழர் பேரவையின் உறுப்பினர்கள் நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணத் துக்கு விஜயம் மேற்கொள்கின்றனர்.

இதன்போது நாம் வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி கோயிலில் விசேட வழிபாடுகளில் ஈடுபடவுள்ளோம்.

அதன்பின்னர் நல்லை ஆதீன குரு முதல்வர் மற்றும் யாழ். மறைமாவட்ட ஆயர் ஆகியோரைச் சந்தித்து, இனங்க ளுக்கிடையிலான நல்லிணக்கம், மறு சீரமைப்பு, சமூக நலன் மற்றும் அபி விருத்தி ஆகியவற்றை மையமாகக் கொண்ட முக்கிய விடயங்களை உள்ள டக்கிய “இமயமலைப் பிரகடனம்” தொடர் பில் தெளிவுபடுத்தவுள்ளோம்.” – என் றார்.

# மாகாண மட்டத்தில் போதுமானளவு அதிகாரப் பகிர்வை உறுதிப்படுத்திய புதிய அரசமைப்பு கட்டாயம் வேண்டும்

## 'இமயமலைப் பிரகடனம்' முன்னெடுப்பு அமைப்பினர் கூட்டறிக்கை




(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"இமயமலைப் பிரகடனம்" முன்னெடுப்பு என்ற தலைப்பில் கண்டியில் இன்று பிற்பகல் நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர்கள் மேற்கண்டவாறு கோரியுள்ளனர்.

ஊடக சந்திப்பின் நிறைவில் அவர்கள் வெளியிட்ட கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

சிறந்த இலங்கைக்கான சங்க மன்றம் (பல்வேறு நிக்காயக்களைச் சேர்ந்த மூத்த பௌத்த பிக்குகள்) மற்றும் உலகத் தமிழர் பேரவை உறுப்பினர்கள் இலங்கை மக்களுக்காக மக்களிடையே இந்த தேசிய உரையாடலைத் தொடங்குவதில் முன்நிற்பதையிட்டு மிகவும் பணிவு அடைகின்றோம். இலங்கையில் உள்ள பல்வேறு சமூகங்களுக்கிடையில் புரிந்துணர்வையும் சமாதானத்தையும் மேம்படுத்தும் நோக்கத்துடன் நாம் ஏறக்குறைய ஒரு வருடமாக இதில் ஈடுபட்டு வருகிறோம். ஏப்ரல் 2023 இல் நாகர்கோட்டில் (நேபாளம்) நடந்த ஆரம்ப கட்டமைக்கப்பட்ட ஈடுபாடுகள் ஒருவர் ஒருவரது கருத்துக்களை புரிந்து கொள்ளவும், இத் தேசிய உரையாடலைத் தொடங்குவதற்குக் கூட்டாக ஒரு கட்டமைப்பை உருவாக்கவும் உதவியது. இலங்கை மற்றும் புலம்பெயர் சமூகங்களில் முதல் முறையாக இடம்பெறும் இதுமாதிரி முயற்சியைத் தொடர்வதற்கு வழிகாட்டலாக அமையவிருக்கும் மேலுள்ள தலைப்பைக் கொண்ட 'இமயமலைப் பிரகடனம்' எனும் கூட்டுப் பிரகடனத்தையும் வெளியிட்டோம்.

இன்றைய தினம் இலங்கையில் ஒரு தேசிய உரையாடலின் உத்தியோகபூர்வ தொடக்கத்தைக் குறிக்கின்றது. இந்த தேசிய உரையாடலில் எம்முடன் இணையுமாறு இலங்கையின் ஒவ்வொரு குடிமகனுக்கும் அழைப்பு விடுப்பது மட்டுமல்லாமல், உங்களது சொந்த உரையாடல்களை ஒருவர் ஒருவருடன் மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கிறோம். உங்களுடன் இணைந்து இந்த நோக்கத்தை நனவாக்க நாங்கள் உறுதிபூண்டுள்ளோம். எல்லாச் சமூகங்களிலும் உள்ள (சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம்) மௌனமான பெரும்பான்மையினர் தமது சிவில் கடமையை நிறைவேற்றி, இந்த தேசிய உரையாடலை உண்மையான தேசிய இயக்கமாக மாற்றுவார்கள் என்பதில் எங்களுக்கு முழு நம்பிக்கை இருக்கிறது. ஒவ்வொரு குடிமகனும் கௌரவத்துடனும், நம்பிக்கையுடனும், அச்சமோ சந்தேகமோ இல்லாமல் சம உரிமைகளை அனுபவித்து நிம்மதியாக வாழக்கூடிய ஒரு புதிய விடியல் எனும் பரிசு இங்கு தொக்கிநிற்கிறது.

### ஈடுபாட்டின் பின்னணி

இலங்கை அபாரமான ஆற்றல்களைக் கொண்ட நாடு. அதன் வரலாறு முழுவதும் அப்படித்தான் இருந்தது. நாட்டின் முக்கியத்துவம் எப்போதும் அதன் அளவு மற்றும் சிறிய மக்கள் தொகையை விட அதிக மதிப்பு வாய்ந்திருந்தது. ஏறக்குறைய எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு புதிதாக சுதந்திரம் பெற்ற இலங்கை அமைதியான மற்றும் வளமான ஜனநாயகமாக மாறுவதற்கு வேண்டிய பல பண்புகளை கொண்டிருந்தது. பல நூற்றாண்டுகால காலனித்துவத்தில் இருந்து வெளிவந்து கொண்டிருந்த பல நாடுகளுக்கு இலங்கை (அன்றைய சிலோன்) முன்னேற்றத்துக்கு உதாரணமாக விளங்கும் என்று கருதப்பட்டது. இருப்பினும் பல நாடுகள், குறிப்பாக வெவ்வேறு தேசியங்கள் மற்றும் மதங்களைக் கொண்ட நாடுகள், இந்த மாற்றத்தை கடினமாகக் கண்டன. இலங்கையும் இதற்கு விதிவிலக்கல்ல. உண்மையில், இலங்கையின் அரசியலமைப்பு மற்றும் அதன் அபிவிருத்திப் பாதை ஈற்றில் 2022 இல் அது கடன்தீர்க்க வகையற்ற நாடாக அறிவிக்கப்படுவதற்கு வழிவகுத்தது. அனைத்து சமூகங்களிலும் உள்ள ஏழ்மை மற்றும் குறைந்த வருமானமுள்ள குடும்பங்களில் இதன் தாக்கத்தை அனைவரும் காணக் கூடியதாக உள்ளது.

சமூக மற்றும் பொருளாதாரக் காரணங்களால் உந்தப்பட்டோ அல்லது இன, மொழி, மத வேறுபாடுகள் காரணமாகவோ இடம்பெறும் அரசியல் ரீதியான வன்முறைகளும் எதிர் வன்முறைகளும் இலங்கையை வரையறுக்கும் குணாம்சங்கள் ஆகின. இனப்பிரச்சினையும் அதன் விளைவாக ஏறக்குறைய முப்பது ஆண்டுகள் நீடித்த உள்நாட்டுப் போரும் மிகவும் தாக்கத்தை ஏற்படுத்திய அத்தியாயங்கள் ஆகும். அதன் நேரடியான மனித இழப்புகள் திகைக்க வைக்கிறது - நூறாயிரத்திற்கும் மேற்பட்ட இறப்புகள், பல்லாயிரக்கணக்கான காணாமல் போனவர்கள், இலட்சக்கணக்கானோர் இடம்பெயர்ந்தனர். இது ஒரு புதிய 'தமிழ் புலம்பெயர்' நிகழ்வை உருவாக்கியது. இந்த இழப்புகள் எந்த ஒரு சமூகத்திற்கும் மட்டுப்படுத்தப் பட்டதல்ல என்றாலும், தமிழ் சமூகத்தின் மீதான விகிதாசார பாதிப்பு பன்மடங்கு அதிகமாக இருந்தது.

வன்முறையால் ஏற்படும் மறைமுகத் தாக்கங்களும் இதேபோன்ற பாதிப்பை ஏற்படுத்துகிறது. பல தசாப்தங்களாக அவசரகால ஆட்சி, அதீத இராணுவ மயமாக்கல், மனித உரிமைகள் மற்றும் சுதந்திரங்களுக்கு மதிப்பின்மை, சித்திரவதை மற்றும் தடுப்புக் காவலில் மரணங்கள், பரந்தளவிலான ஊழல் இவை அனைத்தும், நீண்ட காலமாக புரையோடிக்கொண்டிருக்கும் இன, மத முரண்பாடுகள் உட்பட மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் திறனோ அனுதாபமோ இல்லாத ஒரு சுயநல அரசியல் வர்க்கத்திற்கு வழி வகுத்தது. அரசியல் மற்றும் ஆட்சி முறைகள் மீதான மக்களின் நம்பிக்கை அடிமட்டத்தில் உள்ளது. இத்தகைய நிலைமைகளின் கீழ், நாடு ஆழ்ந்த பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருப்பதில் ஆச்சரியமில்லை.

இருப்பினும், இந்த சகிக்கமுடியாத நிலைமைகள் புதிய விழிப்புணர்வுக்கு வழிவகுத்ததுடன், சில அக்கறையுள்ள குடிமக்கள் மேற்கொண்டுள்ள புதிய முயற்சிகள் கார் மேகங்களுக்கு வெள்ளிக் கோடுகள் போலுள்ளன. இலங்கையில் உள்ள பல்வேறு சமூகங்களுக்கிடையில் புரிந்துணர்வு மற்றும் சமாதானத்தை மேம்படுத்துவதற்காக "சிறந்த இலங்கைக்கான சங்க மன்றம்" சார்ந்த சில முக்கிய பௌத்த பிக்குகளாலும், உலகத் தமிழர் பேரவை உறுப்பினர்களாலும் அத்தகைய ஓர் ஆர்வமுள்ள அணுகுமுறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

### நாகர்கோட் உரையாடல்

இந்த கலந்துரையாடல்கள் இரு தரப்பினருக்குமிடையில் பொதுவான தன்மைகள் இருப்பதை வெளிப்படுத்தியது. இரு தரப்பினரும் சமரசம் செய்ய முடியாத அளவுக்கு வேறுபாடுகளைக் கொண்ட தீவிர எதிரிகள் என எண்ணப்பட்டபோதிலும் - 'நாட்டின் அனைத்து மக்களினங்களுக்குமான ஒரு சிறந்த இலங்கை எனும் பொதுவான தொலைநோக்கு' - அவர்களிடம் காணப்பட்டது. நாட்டில் இன, மத நல்லிணக்கத்தை சீர்குலைப்பதில் 'புரிந்து கொள்ளாமையும் மற்றவர் பற்றிய பயமும்'தான் அடிப்படைக் காரணிகள் என்பது தெளிவாகத் தெரிந்தது.

சிங்கள பௌத்த சமூகம், தமது விரோத சக்திகளாக கருதும் சிறுபான்மை சமூகங்கள் மற்றும் புலம்பெயர்ந்த தமிழ் மக்களிடமிருந்து தாம் வாழும்

(07ஆம் பக்கம் பார்க்க)

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## கோட்டாவுக்கு சளைத்தவரல்லர் ரணில்

● பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தன்னிச்சையாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைவரையும் இலங்கை அரசு உடனடியாக விடுவிக்க வேண்டும்

● இந்தச் சட்டம் இரத்துச் செய்யப்படும் வரை அதன் பயன்பாட்டுக்குத் தடை விதிக்க வேண்டும்

- இவ்வாறு மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

போரில் உயிரிழந்தோரை நினைவுகூர்ந்தமைக்காக 9 பேர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்து கண்காணிப்பகம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

சிறுபான்மை இனத்தவர் மற்றும் சிவில் சமூக ஆர்வலர்களைத் தன்னிச்சையாகத் தடுத்து வைத்து சித்திரவதை செய்வதற்கு நீண்டகாலமாகப் பயன்படுத்தப்பட்டு வரும் பயங்கரவாதத் தடைச் சட்டம் மாற்றியமைக்கப்படும் என இலங்கை அரசு சர்வதேச நட்பு நாடுகள், வர்த்தக பங்காளிகள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபைக்குப் பலமுறை உறுதியளித்துள்ளது என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியுள்ளது.

உள்நாட்டுப் போரில் இறந்தவர்களை நினைவு கூரும் தமிழர்களுக்கு எதிராகப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பயன்படுத்துவது கொடூரமான துஷ்பிரயோகம் என்பதுடன், தொடர்ச்சியாக ஒரு சமூகம் ஓரங்கட்டப்படுகின்றது என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியப் பணிப்பாளர் மீனாட்சி கங்குலி தெரிவித்துள்ளார்.

அது மாத்திரமல்ல, இவ்விடயத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசு இரட்டை வேடம் போடுகின்றது என இப்பத்தியில் ஏற்கனவே நாம் சுட்டிக் காட்டிய விடயத்தை மீனாட்சி கங்குலியும் விசேடமாகச் சுட்டுகின்றார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நல்லிணக்கம் தொடர்பில் பேசுகின்ற போதிலும், அவரது அரசின் நடவடிக்கைகள் இனப் பிளவுகளை மேலும் ஆழப்படுத்துகின்றன என்றுஅவர் கூறியுள்ளார்.

இது ரணில் அரசின் சாயம் சர்வதேச மட்டத்திலும் வெளுத்து வருவதையே உறுதிப்படுத்துகின்றது.

அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், பிரித்தானியா மற்றும் இலங்கையின் சர்வதேச பங்காளர்கள், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம் ஆகியனவும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தையும் அதன் பயன்பாட்டையும் விமர்சித்துள்ளன என்பதையும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் எடுத்துரைத்துள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஒட்டிய முக்கிய விடயம் ஒன்றை நாட்டின் முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் ஆளும் கட்சியின் அதிருப்திக் குழு நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் நாடாளுமன்றத்திலேயே அம்பலப்படுத்தியிருக்கின்றார்.

"பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தம் செய்யப்படும் வரை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழான கைதுகள் இடம்பெறாது என முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சர்வதேசத்துக்கு வாக்குறுதி வழங்கினார். வெளிவிவகாரத்துறை அமைச்சராக நான் அந்த வாக்குறுதியை உறுதிப்படுத்தினேன்.

"சர்வதேசத்துக்கு வழங்கிய வாக்குறுதியை அரசு மீறியுள்ளது. அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜனநாயக ரீதியில் போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் தற்போது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுகின்றார்கள். இந்த விடயம் தொடர்பில் கொழும்பில் உள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகள் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளனர்." - இப்படி ஒரு விடயத்திலாவது உண்மையை வெளிப்படுத்தியிருக்கின்றார் பேராசிரியர் பீரிஸ்.

அவரின் வெளிப்படுத்தல் ஊடாக இரண்டு விடயங்கள் தெளிவாகின்றன.

ஒன்று - சிறுபான்மையினரை அடக்கி, ஒடுக்கும் விதத்தில் இப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவுக்கு சளைத்தவரல்லர்.

அடுத்தது - ரணிலின் அடக்குமுறைப் போக்கு சர்வதேச சமூகத்தின் அதிருப்திக்குள்ளாகியிருக்கின்றது.

சிங்கள - பௌத்த பேரினவாதிகளைத் திருப்திப்படுத்த விரும்பும் சிங்களத் தலைவர்கள் பேரினவாதத்தில் முற்றாக மூழ்கி விடுகின்றார்கள் என்பதே உண்மை. பண்டாரநாயக்கா காலத்தில் இருந்து இதுதான் நடக்கின்றது.



## பட்டிருப்பு மாணவர்கள் கௌரவிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

களுவாஞ்சிகுடி பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயத்தில் க.பொ.த.சாதாரணதர பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

பாடசாலை முதல்வர் ரீ.பார்த்தீபன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதி அதிபர், உதவி அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி சாரா உத்தியோகத்தர்கள், பழைய மாணவர் சங்க பிரதிநிதிகள், பாடசாலை அபிவிருத்திச் சங்க பிரதிநிதிகள் மற்றும் பெற்றோர் கலந்து கொண்டனர்.

# மாகாண மட்டத்தில்... (05ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒரே நாட்டின் வரலாறு மற்றும் தனித்துவமான அடையாளத்தையும் பெருமையையும் பாதுகாப்பது பற்றி அச்சம் கொண்டுள்ளது. மறுபுறம், தமிழ் மக்களின் உணர்ச்சிகளும் அரசியலும் எப்போதும் திட்டமிட்ட அரச நடவடிக்கைகளின் மூலம் தாம் வரலாற்றுரீதியாக நீண்ட காலமாக வாழ்ந்து வரும் பகுதிகளில் அவர்களின் வரையறுக்கும் அடையாளத்தையும் இருப்பின் சாத்தியத்தையும் இழக்கின்றனர் என்ற ஒரு பிரதிபலிப்பு அச்சத்தால் இயக்கப்பட்டு வருகின்றன.

பௌத்த பிக்குகள் பற்றி தமிழ் மக்களிடையே கடுமையான எதிர்மறையான கருத்துக்கள் உள்ளன. அவர்கள் இன மோதல்கள் மற்றும் துன்பங்கள் தொடர்வதற்கு ஒரு முக்கிய காரணியாக பார்க்கப்படுகிறார்கள். ஆனால் இந்தப் பார்வை பல நூற்றாண்டுகளாக இலங்கை பௌத்த பிக்குகள் அவர்களின் சமூகங்களின் நலனை மேம்படுத்துதல் உட்பட ஆற்றிய பல உன்னத பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. அதேபோல், பெரும்பான்மை சமூகத்தினரிடையே உள்ள பொதுவான கருத்து பொருளாதார ரீதியாக வெற்றிகரமான மற்றும் செல்வாக்கு மிக்க புலம்பெயர்ந்த தமிழர்கள் இலங்கையை அழிப்பதில் முனைந்துள்ளனர் என்பதாகும். மேயன்றி, தமிழரின் இடப்பெயர்வு மற்றும் அவர்கள் தத்தெடுத்த நாடுகளில் எதிர்கொள்ளும் உடல் மற்றும் உணர்ச்சி ரீதியான கஷ்டங்கட்கு தம் பிறந்த நாட்டில் அவர்கள் சந்தித்த நிலைமைகள் தான் காரணம் என்பதை உணரவோ அங்கீகரிக்கவோ தவறுகிறார்கள்.

இந்த மாறுபட்ட கருத்துக்கள் மற்றும் அச்சங்கள் எல்லாம் பகுத்தறிவின் அடிப்படையில் உருவானவையல்ல என்பதை ஒருவர் காணலாம். பல அரசியல் தலைவர்களும், சில மதப் பிரமுகர்கள் மற்றும் தன்னல அக்கறையுள்ளவர்களும் எப்பொழுதும் இந்த அச்சங்களை சுயநல நோக்குடன் பயன்படுத்திக் கொள்ள முயல்வர் என்பதும் உண்மையே. எனவே, இந்தத் தேசிய உரையாடலைத் தொடங்க இலங்கை மக்களாகிய உங்களை நாங்கள் அணுக விரும்பினோம். நாகர்கோட் உரையாடல் இலங்கை முழுவதிலும் மற்றும் புலம்பெயர் சமூகங்களுக்கிடையிலும் மீண்டும் மீண்டும் செய்யப்படல் வேண்டும். இத்தகைய ஓர் செயல்முறைக்கு அனைத்து சமூகங்களையும் சேர்ந்த ஏராளமான மக்களால் அடையாளம் காணக்கூடிய ஓர் வழிகாட்டு ஆவணம் தேவை. நாகர்கோட்டில் செய்யப்பட்ட 'இமயமலைப் பிரகடனம்' நமது இணைந்த பயணத்தின் ஓர் முக்கிய பயனாகும்.

## இமயமலைப் பிரகடனம்

'இமயமலைப் பிரகடனம்' என்பது எந்தவொரு குறிப்பிட்ட சமூகத்தின் கருத்தியல் அடிப்படைகளிலும் அதிகளவு சார்ந்திருக்காமல், இலங்கைக்கு ஒரு புதிய மற்றும் முற்போக்கான பார்வையை விளக்கிக்கூறும் ஒரு நடைமுறை ஆவணமாகும். ஆறு அறிக்கைகளைக் கொண்டுள்ள இப் பிரகடனம் இங்கு முழுமையாகத் தரப்படுகிறது.

- தமது அடையாளம் மற்றும் பெருமையை இழந்துவிடுவோமா என்ற பயம் எந்த ஒரு சமூகத்திற்கும் ஏற்படாத வகையில் நாட்டின் பல்வகைமைத் தன்மையைப் பேணிப் பாதுகாத்தலும், ஊக்குவித்தலும்.
- பொருளாதார நெருக்கடியை மேற்கொள்ளல், உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்க பொருத்தமான அபிவிருத்தி மாதிரியைத் தேர்ந்தெடுத்தல், வெளிநாட்டு இலங்கையர்களதும் மற்றவர்களதும் ஈடுபாடு மற்றும் முதலீடுக்கு வசதி செய்தல், இவை மூலம் நாடு வளர்ச்சிப் பாதையில் இருப்பதை உறுதி செய்து இலங்கையை நடுத்தர வருமானம் கொண்ட நாடாக மாற்றுதல்.
- மாகாண மட்டத்தில் போதுமான அளவு அதிகாரப் பகிர்வை உறுதிப்படுத்தியும், தனிநபர் மற்றும் கூட்டு உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கக்கூடியதும், சமத்துவம் மற்றும் அனைத்து மக்களுக்கும் சமமான குடியுரிமையை முன்னிலைப்படுத்தியும் அதற்கான பொறுப்புவாய்ந்த நிறுவனங்களை உள்ளடக்கியதுமான ஒரு அரசியலமைப்பை உருவாக்குதல். அதுவரை நடைமுறையில் இருக்கும் அரசியலமைப்பில் உள்ளவாறான அதிகாரப் பகிர்வினைக் கண்ணியத்துடன் நடைமுறைப்படுத்தல்.
- ஒன்றுபட்ட பிளவுபடாத நாட்டினுள் அதிகாரத்தைப் பகிர்தலும், மத, கலாசார மற்றும் ஏனைய அடையாளங்களை ஏற்று அத்தகைய அடையாளங்களுக்கு மதிப்பளிப்பதோடு இனங்களுக்கிடையிலான நம்பிக்கை மற்றும் மதங்களுக்கிடையிலான நம்பிக்கையைக் கட்டியெழுப்ப உழைத்தல்.
- கடந்த கசப்பான காலங்களில் இருந்து கற்றுக்கொள்ள உறுதிகொண்டு, மீண்டும் இவ்வாறான துயரங்கள் ஒரு போதும் ஏற்படாதிருக்க பொறுப்புக் கூறல் உட்பட தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் ஒப்புரவு அடைந்த ஓர் இலங்கைக்கான தூர நோக்கு.
- இருதரப்பு மற்றும் பலதரப்பு உடன்படிக்கைகளுக்கும் இதர சர்வதேசக் கடப்பாடுகளுக்கும் மதிப்பளித்து, சுயாதீனமான மற்றும் ஆற்றல் வாய்ந்த வெளிநாட்டுக் கொள்கையைப் பின்பற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் இலங்கை ஜனநாயக, சமாதானமான, வளமான உலக நாடுகள் மத்தியில் தனது பெருமையை நிலைநாட்டுவதற்கு வழிசெய்தல்.

## அடுத்த நடவடிக்கைகள்

பௌத்த துறவிகள் மற்றும் உலகத் தமிழர் பேரவை ஆகிய இருதரப்பினரும், நாம் இலங்கையின் சில சமூகங்களின் கருத்துக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் குழுக்களே அன்றி, ஒவ்வொரு குடிமகனதும் அல்லது குழுவினதுமல்ல என்பதை உணர்ந்துள்ளோம். அதே சமயம், நாம் செல்லும் பாதை நேர்மையானது என்பதையும் நாம் அறிவோம். சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கை வரலாற்றில் எடுக்கப்படும் இவ்விதமான துணிச்சலான முதல் கூட்டு முயற்சி இதுவாகும். இலங்கையிலும் புலம்பெயர் நாடுகளிலும் சமயங்களுக்கிடையிலான புரிந்துணர்வு மற்றும் நல்லிணக்கத்தை ஊக்குவித்தலின் அடிப்படையில்தான் சமாதானமும் ஸ்திரத்தன்மையும் கட்டியெழுப்பப்பட்டு, அனைவருக்கும் சிறந்த எதிர்காலத்திற்கு வழிசெய்ய முடியும்.

இருபத்தைந்து மாவட்டங்களிலும் பல்சமய பணிக்குழுக்களை நிறுவும் நோக்கில் பல்வேறு மதச் சமூகங்கள் மற்றும் மதத் தலைவர்கள் மட்டில் எங்களின் தற்போதைய கவனம் இருக்கும் அதே வேளையில், 'இமயமலைப் பிரகடனத்தில்' விபரிக்கப்பட்டுள்ள பல விளைவுகள் தக்க அரசியல் செயல்முறைகள் மூலம் மட்டுமே சாத்தியமாகும். எனவே, இந்த முயற்சியை இலங்கையின் அனைத்து முக்கிய அரசியல் கட்சிகள் மற்றும் அக்கறையுள்ளவர்களுக்கு அறிவித்து, இந்த சவாலை எதிர்கொள்ள எழுமாறு கேட்டுக் கொண்டுள்ளோம். ஆயினும் இலங்கை மக்கள் மற்றும் புலம்பெயர் சமூகங்கள் இந்த அரசியல் செயல்முறைகளைப் பெறுமதிமிக்கதாக ஆக்குவதில் முக்கிய பங்கை வகிப்பார்கள்.

புலம்பெயர் சமூகங்கள் வசிக்கும் நாடுகளின் அரசாங்கங்கள் மற்றும் இந்தியாவுடனும் நாங்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளோம். பன்முகத்தன்மை கொண்டாடப்பட்டு அது பலமாகப் பார்க்கப்படும் இந்நாடுகளில் வாழ்ந்த வாழ்க்கை அனுபவமும், தொழில் மற்றும் தனிப்பட்ட அனுபவங்களும், புலம்பெயர் நாடுகளில் உள்ள பலருக்கு இலங்கையின் பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார முன்னேற்றங்களுக்குப் பங்களிப்பதை சாத்தியமாக்குகின்றன.

எமது கூட்டு இலட்சியத்தை அங்கீகரித்து, இந்த தேசிய உரையாடலை ஆரம்பிப்பதற்கு வணக்கத்திற்குரிய மகாநாயக்கர்கள் உட்பட அனைத்து முக்கிய மதங்களின் மூத்த தலைவர்கள் மற்றும் பீடாதிபதிகள், ஜனாதிபதி மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள், மற்றும் இலங்கையின் அனைத்து மக்களினங்களுக்கும் பல்சமய புரிந்துணர்வு, ஒற்றுமை, சமாதானம், நல்லிணக்கம், சமத்துவம், செழிப்பு ஆகியவற்றை மேம்படுத்த உழைக்கும் சிவில் சமூக அமைப்புகளின் ஆசீர்வாதங்கள் கிடைத்ததையிட்டு நாம் உண்மையிலேயே உத்வேகமடைந்துள்ளோம்.

இன்று நாம் தொடங்கும் பயணம் நீண்ட மற்றும் கடினமானதாக இருக்கும், ஆனால் அது பொறுப்பு வாய்ந்த நிர்வாக நிறுவனங்களை உருவாக்குவதற்கும், நீண்டகால இனக் குறைகள் மற்றும் பொருளாதாரச் சீர்கேடுகளைத் தீர்ப்பதற்கு உகந்த சூழல் ஏற்படுவதற்கும் உதவும். இத் தேசிய உரையாடலின் மூலம் பெறும் வெற்றியானது சாதாரண குடிமக்களுக்கு நேரடிப் பொருளாதார, அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தர நன்மைகளுடன் இலங்கையை அளப்பெரியவகையில்மாற்றும்ஆற்றல்கொண்டுள்ள அதே வேளையில், சர்வதேச சமூகத்தில் ஒரு முற்போக்கான மரியாதைக்குரிய நாடாக அதன் பெயரை மீட்டெடுக்கும்.

நாகர்கோட் உரையாடல் இந்த வாரம் இலங்கையில் தொடர்கிறது. 'இமயமலைப் பிரகடனம்' இப்போது பொது ஆவணமாக உள்ளது. இவ் வாரம் நாம் ஆரம்பித்துள்ள தேசிய உரையாடலை, ஒவ்வொரு இலங்கைக் குடிமகனும் கௌரவத்துடனும், நம்பிக்கையுடனும், அச்சமோ சந்தேகமோ இன்றி சம உரிமைகளை அனுபவித்து நிம்மதியாக வாழ வைக்கவல்ல தேசிய இயக்கமாக மாற்றுவது, இலங்கை மக்களாகிய எம் எல்லோரிலும் தங்கியுள்ளது. – என்றுள்ளது.



# பாரம்பரிய உணவுகள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு காத்தான்குடியில்

(எம்.ஏ.ஏ.அக்தார்)

மட்டக்களப்பு விவசாய திணைக்களத்தின் ஏற்பாட்டில் காத்தான்குடி விவசாய போதனாசிரியர் பிரிவின் ஒழுங்குபடுத்தலின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கு விவசாய உற்பத்தி மற்றும் தயாரிப்புக்கள் தொடர்பில் விழிப்புணர்வு வழங்கும் நிகழ்வு காத்தான்குடி ஸாவியா பெண்கள் பாடசாலையில் நடைபெற்றது.

விவசாய பேராசிரியர் ஜனாபா முபீதா றமீஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதி விவசாயப் பணிப்பாளர் வி.பேரின்பராசா, உதவி விவசாயப் பணிப்பாளர் என்.கணேசமூர்த்தி, பாடசாலை அதிபர் எஸ்.எம்.முஜீப் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், விவசாயத் திணைகள உத்தியோகத்தர்கள் ஆகியோர் பாரம்பரிய உணவுகள் தயாரித்துப் பகிர்ந்தளித்தனர்.




# ஏறாவூர் நகர சபைக்கு சிறப்பு விருது கிடைத்தது

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கை பொது நிதி கணக்காளர் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நாட்டிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட கணக்கீட்டு முகாமைத்துவத்தை சிறப்பாக அறிக்கையிடுதல் சம்பந்தமான போட்டியில் ஏறாவூர் நகரசபைக்கு சிறப்பு விருது கிடைத்துள்ளது.

கொழும்பு பண்டாரநாயக ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற பரிசளிப்பு நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள், மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் நீல் அசோக்க ரஞ்சித்திடமிருந்து ஏறாவூர் நகரசபையின் சார்பாக சிறப்பு விருதை அதன் செயலாளரும் விஷேட ஆணையாளருமான எம்.எச்.எம்.ஹமீம், கணக்காளர் புஸ்ரா நுஸைர் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

# விருது வழங்கிக் கௌரவிப்பு!



(த.சுபேசன்)

வடமாகாண பண்பாட்டுப் பெருவிழாவில் மேற்பார்வை பொது சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட்டுக்கு (கவிஞர்.சூரியநிலா) சிறந்த நூல் பரிசுத் தெரிவில் அறிவியலுக்கான விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.

சுவாசத்தொகுதி சார்ந்த தொற்றும் மற்றும் தொற்றா நோய்கள் பற்றியும், அவற்றின் ஆபத்துக் காரணிகள், தொழில் சுகாதாரம் மற்றும் கட்டுப்பாடுகள் குறித்து 2022 ஆம் ஆண்டில் ஜென்சன் றொனால்ட்டால் எழுதப்பட்ட "என்சுவாசமே" எனும் நூலுக்கே அறிவியலுக்கான விருது வழங்கப்பட்டுள்ளது.

நூலாசிரியருக்கு 2021 ஆம் ஆண்டில் "சுகவிழி" எனும் சுகாதார மேம்பாட்டு ஏட்டுக்கு அறிவியலுக்கான விருது வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.



# தொழில் முனைவோர் கலாசாரத்தை உருவாக்கும் நோக்கில் செயலமர்வு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை, கல்வியமைச்சு மற்றும் கைத் தொழில் அமைச்சுடன் இணைந்து பாடசாலை மாணவர்களை எதிர்காலத்தில் தொழில் முனைவோர் கலாசாரத்துக்குள் ஈர்க்கும் திட்டத்தின் செயலமர்வை பட்டிருப்பு தேசிய பாடசாலையில் நடத்தியது.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் தொழில் முனைவோர் கலாச்சாரத்தை யும் தொழில் முனைவோர் மனநிலை யையும் மேம்படுத்துதல், பொது மக் களை தொழில் முயற்சியை நோக்கி ஈர்க்க முயற்சித்தல் , தொழில்துறைக்கு முன்னுரிமை அளிக்கும் மாணவராக இருப்பதன் மூலம் எதிர்காலத்தில் வெற் றிகரமான தொழில் முனைவோராக்கல், தேசிய உற்பத்திக்கு பங்களிப்புச் செய்ய முயற்சி மேற்கொள்ளல், வேலை வாய்ப்பை உருவாக்குபவரை பாடசாலை மூலம் சமூகத்துக்குக் கொண்டுவரல், சவால்களுக்குப் பதிலளிக்கக் கூடிய வர்த்தக வாய்ப்பாக மாற்றக் கூடிய இலங்கையரை உருவாக்கல், பாடசாலை தொழில் முனைவோர் வட்டங்களை ஏற்படுத்துதல் போன்ற குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டு இது நத்தப்பட்டது.களுவாஞ்சிகுடி, பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலய அதிபர் தி.பார்த்திபன் தலைமையில் பாடசாலை கேட்போர் கூடத்தில் செயலமர்வு நேற்று முன்தினம் (6)இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மத்திய வங்கியின் திருகோணமலை பிராந்திய முகா மையாளர் மைக்கல் நிரோஸன், கைத் தொழில் அபிவிருத்தித் திணைக்கள உதவிப் பணிப்பாளர் கௌசல்யா ஸ்ரீகாந் தன், கைத்தொழில் அபிவிருத்தி திணைக் கள விரிவாக்கல் உத்தியோஸ்தர் என். கோகுலதாஸ் ஆகியோருடன் வளவாள ராகக் குணாளன் கலந்து கொண்டார்.

# கிழக்கு மாகாண மாணவர்களுக்கு சீனாவில் இருந்து புத்தகப் பைகள்

(எஸ்.கீதபொன்கலன்)

சீன நாட்டின் யொனன் மாகாண மக்கள் மன்றம் அன்பளிப்பாக வழங்கிய பாடசாலை மாணவர்களுக்கான புத்தகப்பைகள் நேற்று முன்தினம் (6) திருகோணமலை மாவட்டம், கந்தளாய் கல்வி வலயத்துக்கு உட்பட்ட கந்தளாய் கனிஷ்ட பாடசாலையில் நடைபெற்ற நிகழ்வின் போது மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில அத்துக்கோரளவால் மாண வர்களுக்கு இவை வழங்கப்பட்டன.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்ட மானுக்குச் சீனாவின் யொனன் மாகாண மக்கள் மன்றம், கிழக்கு மாகாண மாணவர்களுக்கு வழங்குவதற்கென பாடசாலைப் புத்தகப் பைகளை அன்பளிப்பாக வழங்கியிருந்தது.

அயல் நாடுகளுடன் சினேக பூர்வ நட்புறவை பேணுவதை நோக்காகக் கொண்டு சீன நாட்டு மக்கள் மன்றம் இந்த அன்பளிப்பை வழங்கி யியுள்ளது.

கிழக்கு மாகாணம் முழுவதிலும் உள்ள பாடசாலை மாணவர்கள் 5000 பேருக்கு முதற்கட்டமாக புத்தகப்பைகள் வழங்கப்படவுள் ளமை குறிப்பிடத்தக்கது.





# மலேசியா மனக் கணித போட்டியில் மன்னார் மாணவர்கள் சாதனை!

(மன்னார் நிருபர்)

மலேசியாவில் நடைபெற்ற 80 இற்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந் தவர்கள் பங்கு பற்றிய மனக் கணிதப் போட்டியில் மன்னார் மாவட்டத்தில் இருந்து சென்ற 5 மாணவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

டிசெம்பர் 3 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மலேசியாவில் சர்வதேச மனக் கணிதப் போட்டி இடம்பெற்றது. இந்தப் போட்டியில் உலகளாவிய ரீதியில் 80 இற்கும் மேற்பட்ட நாடுகளை சேர்ந்த 2 ஆயிரத்து 500 மாணவர்கள் பங்கு பற்றியிருந்தனர். இலங்கையைப் பிரதிநிதித்துவபடுத்தும் வகையில் 62 மாணவர்கள் இதில் பங்குபற்றினர்.

மன்னார் மாவட்டத்தை சேர்ந்த 5 மாணவர்களும் கலந்து கொண்டு மனக் கணிதப் போட்டியில் பங்கு பற்றி வெற்றிக் கிண்ணங்களை வென்றுள் ளனர்.




அந்த வகையில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்களான எஸ். சிறோன் றாஜ் 'டி' பிரிவில் பங்கு பற்றி 2 ஆம் இடத்தையும், மாணவன் வி. செஸான் 3 ஆம் இடத்தையும், லஸால் கிட்ஸ் கேம்பஸில் கல்வி கற்கும் மாணவி ஜே. ரெறா ஜெசாரி 3 ஆவது இடத்தையும் யோசப் வாஸ் ஆங்கிலப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவன் கே. அறிஸ்மித் 3 ஆவது இடத்தையும் , தோட்டவெளி பாடசாலையில் கல்வி கற்கும் மாணவி ஆர். ரியானா 3 ஆம் இடத்தையும் பெற்று மன்னார் மாவட்டத்துக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

இவர்கள் மன்னார் ருஊஆயுளு நிறுவனத்தின் நிர்வாகியும் ஆசிரி யருமான ந. கேதீஸ்வரனின் வழி காட்டலின் கீழ் இந்தப் போட்டியில் பங்கு பற்றி வெற்றிக் கிண்ணங்களை வென் றுள்ளனர்.



# ஓய்வுபெற்ற கிராம சேவகருக்கு கமக்கார அமைப்புகளால் பாராட்டு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

பொத்துவில் பிரதேச செயலர் பிரி வுக்கு உட்பட்ட பொத்துவில் -5 கிராமத் தில் கிராம சேவையாளராக கடமையாற்றி அண்மையில் ஓய்வுபெற்ற கிராம சேவை உத்தியோஸ்தர் முஹம்மட் அபுல் ஹச னின் சேவையைப் பாராட்டி கௌரவிக் கும் நிகழ்வு கிராமத் தில் இயங்கிவரும் கமக்கார அமைப்புக் களின் ஏற்பாட்டில் பொத்துவில் அல்-பஹ்ரியா வித்தியா லய மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன் போது கிராமத்தில் மிகச் சிறப்பாகக் கடமையாற்றிய கிராம சேவை உத்தியோஸ்தர் முஹம்மது அபுல் ஹசனின் சேவையைப் பாராட்டிக் கௌரவித்து பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னமும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பொத்துவில் - 05 கிராமத்துக்கு நியமிக்கப்பட்டிருக்கும் புதிய கிராம சேவகர் எம்.ஐ. முஸ்தாக்கும் வரவேற்கப்பட்டார்.



# ஐந்து மில்லியன் சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு வரவழைப்பதுதான் திட்டம்!

## பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரப் தெரிவிப்பு

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

ஐந்து மில்லியன் சுற்றுலா பயணிகளை இலங்கைக்கு வரவழைப்பது ஜனாதிபதியின் திட்டமாகும் என்று பிரதேச அபிவிருத்தி நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தின் நாவிதன்வெளி பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டம் பாராளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்பு குழு தலைவருமான சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் தலைமையில் நாவிதன்வெளி பிரதேச செயலக கூட்டம் மண்டபத்தில் இன்று (8) இடம்பெற்றது.

நாவிதன்வெளி பிரதேச செயலாளர் ஆர். ராகுலநாயகி ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து இங்கு உரையாற்றும் போது, நமது நாட்டில் அரச சேவையாளர்கள் அதிக அளவில் உள்ளனர். இவர்களுக்கான செலவினங்கள் வருடாந்தம் பல மில்லியன் ரூபா வழங்கப்பட்டு வருகின்றது. ஐ.எம்.எப் அறிக்கையின் பிரகாரம் அரச சேவையாளர்களின் எண்ணிக்கையை குறைக்க ஆலோசனை வழங்கப்படுகிறது. எனினும் ஒவ்வொரு ஆண்டும் இருந்த அரசியல் சூழல்கள், நெருக்கடிகளால் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. திடீரென அவர்களை இப்போது தூக்க முடியாது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்க செய்ய வேண்டும். இதற்காகச் சுற்றுலா பயணிகளை அதிகளவில் நம் நாட்டுக்குள் கொண்டு வருவதற்கான வேலைத் திட்டத்தை ஜனாதிபதி முன்னெடுத்து வருகிறார்.

2013 ஆம் ஆண்டு 1.5 மில்லியன் சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். இது ஒரு பெரிய அடைவாகும். 2004ஆம் ஆண்டு 2.5 மில்லியன் சுற்றுலா பயணிகளை இலங்கைக்கு வர வைப்பது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணமாகும்.

அண்மையில் இந்தியா ஒரு அறிக்கையை வெளியிட்டு இருக்கிறது. அதில் இலங்கையில் 5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை ஏற்றுக் கொள்ளக் கூடிய தகுதி இருக்கிறது. இலங்கையினுடைய சுற்றுலா தளங்கள், காலநிலை, இயற்கை போன்ற அம்சங்கள் இதற்கு வழி வகுக்கின்றன என்று.

அதிகமான சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வந்து செல்வதால் இலங்கையினுடைய பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்க முடியும். இதற்கு நாட்டின் பிரஜைகள் என்ற அடிப்படையில் எல்லோரும் ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும்.

பிரதேச அபிவிருத்தி குழு கூட்டங்களை பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் நாம் ஒழுங்கமைக்கும் போது சில திணைக்களின் பொறுப்பு அதிகாரிகள் கூட்டங்களில் கலந்து கொள்வதில்லை. அதனால் தீர்மானங்களையும் பொது மக்களுக்கான சேவைகளையும் வழங்குவதில் நாம் இழுத்தடிப்பு செய்கின்றோம். எனவே 2024 இல் முக்கிய தீர்மானங்களை எடுக்க வேண்டியுள்ளது. திணைக்களங்களுடைய பொறுப்புதாரிகள் கட்டாயம் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும்.- என்றார்.

இந்த அபிவிருத்தி குழு கூட்டத்தில் நாவிதன்வெளி பிரதேச பொதுமக்கள் எதிர்கொள்ளும் வீட்டு திட்டம், காணி, குடி தண்ணீர், கல்வி அபிவிருத்தி, சுகாதாரம், மின்சாரம், வீட்டுத் திட்டம், வீதி அபிவிருத்தி, காட்டு யானைகளால் அண்மைக் காலமாக ஏற்பட்டுவரும் அச்சுறுத்தல் உட்பட பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன.

அதே நேரம் திணைக்களத் தலைவர்களால் முன்வைக்கப்பட்ட சில பிரச்சினைகளுக்குத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. எதிர்காலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய வேலைத் திட்டங்கள் தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இந்தப் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் உதவி பிரதேச செயலாளரின் கணக்காளர் றிஸ்வி யஹ்சர், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி திலகராணி கிருபைராசா, நாடாளுமன்ற உறுப்பினர்களின் இணைப்பாளர்கள் உட்பட திணைக்களங்களின் தலைவர்கள், பொறுப்பு உத்தியோகத்தர்கள், சமூக நிறுவனங்களின் தலைவர்கள் என பலர் கலந்துகொண்டனர்.





# மெய்யியல் நோக்கில் பெண்ணியம்...!

பெண்ணியம் என்கின்ற சொல் ஆங்கிலத்தில் feminism என்று அழைக்கப்படுகின்றது. இது feminism, femina என்ற இலத்தீன் சொற்களில் இருந்து பிறந்ததாகும். ஆரம்ப காலங்களில் பெண்ணியம் என்பது பெண்களின் தேவைகளை நிறைவேற்ற அவர்கள் சார்பாக போராடுவது ( Advocacy of the claim of women) என்ற பொருளை மையப்படுத்தியாய் அமைந்தது. அதன் பிற்பாடான காலங்களில் பாலியல் சமத்துவம் (sexual equality) என்கின்ற கருத்தைத் தனது மையப் பொருளாகக் கொண்டது. மரபுவழி வந்த பண்பாட்டின் பின்னணியாய் ஆணாதிக்கம் மேலோங்கி அதன் வழியாக பெண்களின் சமத்துவத்தை அது இல்லாமல் செய்தது. ஆண்களின் பாலியல் தேவைக்கு பயன்படுத்தும் பொருளாக அல்லது ஒரு பண்டம் பொருளாகவே பெண்களை ஆண்கள் கருதினர்.

ஆண்களின் நலன்களின் சார்ந்தே அவர்கள் பெண்களைப் பயன்படுத்துவதை பெண்ணியம் வன்மையாக் கண்டித்தது.

பெண்கள் குறித்த பெறுமதி அல்லது மதிப்பு ஏனைய பால் கொண்ட பெறுமதியை அல்லது மதிப்பை விடவும் வித்தியாசமாக உள்ளது. என்றால் அது ஆண் ஆதிக்கம் மேலோங்கி நிற்கும் வரையில்தான் என்கின்ற பெண்ணிய கோட்பாட்டாளர் ஒருவரின் துயர் படிந்த கருத்தைக்கொண்டு ஆண்களைக் காட்டிலும் பெண்கள் வேறுபடுகின்றரோ? அவ்வாறு வேறுபடுகின்றனர் எனில் எந்த அடிப்படைகளில்? அவ்வாறு? என்பவற்றைப் புரிந்துகொள்ளவே பெண்ணியம் குறித்த அறிக்கை இங்கு கருத்தில் கொள்ளப்படுகின்றது.





ஆரம்ப காலம் தொட்டு மெய்யியலாளர்கள் பெண்கள் குறித்து கொண்டுள்ள வேறுபட்ட கருத்து நிலைப்பாடு ஆண்கள், பெண்கள் குறித்து வேறான சிந்தனை பாங்கைத் தோற்றுவிக்க அடித்தளம் இட்டது எனலாம். பெண்கள் அறிவால் வளர்ந்தவர்கள் அல்ல. அதனால் தான் இயல்பாகவே ஆண்களால் பெண்கள் ஆளப்படுகின்றார்கள்.

இவ்வாறான கருத்தாக்கங்கள் ஆரம்பகால மெய்யியலாளர்களிடம் காணப்பட்டது. இவ்வாறான கருத்தாக்கங்கள் மேலும் ஆண்களில் இருந்து பெண்களை வேறு பிரித்து காட்டியது. ஆனால் பிற்பட்ட காலங்களில் அதாவது 1950 ஆண்டுகளுக்குப் பிற்பாடு பின்னவீனத்துவம் வளர்ச்சி அடைந்த காலப் பகுதியில் பூக்கோ போன்ற மெய்யியலாளர்கள் பெண்ணியம் சார்பாக பல கருத்துக்களை வெளியிட்டனர்.

அந்த வகையில் பூக்கோ பாலியல் என்பது அதிகாரத்தின் வெளிப்பாடு அது பாலியல் அடக்கு முறையின் வெளிப்பாடு அல்ல என்கின்றார்.

இவ்வாறு பின்னவீனத்துவம் பின்னர் வளர்ச்சி அடைந்த சமூகம் பெண்ணும் ஆணும் வேறுபட்டவர்கள். பெண்கள் ஆண்களிலும் பார்க்க பலம் குறைந்தவர்கள் போன்ற கருத்தாக்கங்களை இல்லாது செய்தது.

ஆண்கள் அறிவு பூர்வமானவர்கள் என்கின்ற எண்ணப்பாங்குகள் இல்லாது செய்யப்பட்டன. இயற்கை இருபாலாருக்கும் இடையில் உடல் ரீதியாகவோ, உள ரீதியாகவோ எதுவித பாகுபாடுகளையும் உருவாக்கவில்லை என்கின்றனர் பின்நவீனத்துவவாதிகள்.

இந்த நிலைப்பாட்டுக்கு மேலாய் பாகுபாடு இருக்கின்றன எனக் கோரிக்கைகள் மேலெழும் எனில் இதுவே ஆணாதிக்கம் என்று இனம் காட்டினர்.

**முஹமட் நிஜாம்**
**அஃப்றின்**
**மெய்யியல் துறை,**
**பேராதனை**
**பல்கலைக்கழகம்.**



# ஒலிம்பியாட் போட்டிப் பரீட்சையில் தெரிவான மாணவருக்குச் செயலமர்வு

(எஸ்.கீதபொன்கலன்)

தேசிய மட்டக் கணித ஒலிம்பியாட் போட்டிப் பரீட்சையில் தோற்றித் தெரிவு செய்யப்பட்ட வகை 1 (தரம் 6 ,7) மாணவர்களுக்கான 3 நாள் வதிவிட செயலமர்வு கொழும்பு, மீகொட வள நிலையத்தில் நடைபெற்றது.

நாடுதழுவிய ரீதியில் 110 மாணவர்கள் கலந்துகொண்ட இந்தப் பயிற்சியில் திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் மாணவர்களான யுவின், அஸ்வின், விர்சன், பிரதீஸ், சஸ்வின், சனந்தன் ஆகியோருடன் திருகோணமலை புனித மரியாள் கல்லூரி மாணவி பிரிதிக்ஷியும் கலந்து கொண்டார்.



# ‘கற்போருக்கு கைகொடுப்போம்’ 2023 ஆண்டுக்கான புமைப்பரிசில்

(மஸ்கெலியா நிருபர்)

‘கற்போருக்கு கைகொடுப்போம்’ என்றும் தொனிப்பொருளில் புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றி சித்தி பெற்ற மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு ஹட்டன் சக்தி மண்டபத்தில் சங்கத்தின்தலைவர் உதயசந்திரன் தலைமையில் இடம் பெற்றது.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு சுமார் ஆறாயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் , புத்தகப்பைகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக ஊடகவியலாளரும் பிரதேச சபை முன்னாள் உறுப்பினருமான ராம் கலந்து கொண்டார். ஐக்கிய மக்கள் சக்தியின் மஸ்கெலியா தொகுதி அமைப்பாளரும் பிரதேசசபை முன்னாள் உறுப்பினருமான மஞ்சுள, ஹட்டன் டிக்கோயா நகர சபைப் பொது சுகாதார அதிகாரி பாலகிருஸ்ணன், இளைஞர் சேவைகள் அதிகாரி ஆறு முகம் பாலசுப்பிரமணியம் ஆகியோர் விசேட அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.




# தெலுங்கானா முன்னாள் முதல்வர் மருத்துவமனையில் அனுமதி!



தெலுங்கானா முன்னாள் முதல்வரும், பாரத் ராஷ்ட்ர சமிதி கட்சியின் தலைவருமான கே.சந்திரசேகர ராவ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஏரவல்லியில் அவரது பண்ணை வீட்டில் தங்கியிருந்த கே.சி.ஆர். நேற்றிரவு கீழே விழுந்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது. இதனையடுத்து அவர் ஹைதராபாத் யசோதா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 2014 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த ஆந்திர மாநிலத்தில் இருந்து பிரிந்து தனி தெலுங்கானா உருவானதற்கு காங்கிரஸே காரணம். ஆனால், மாநிலம் உதயமானது முதற்கொண்டு, பி.ஆர்.எஸ் கட்சியின் சந்திரசேகர ராவ் 2 முறை முதல்வராக பதவி வகித்தார். இதனை தொடர்ந்து தெலுங்கானாவின் 3 ஆவது சட்டப்பேரவை தேர்தல் கடந்த நவம்பர் மாதம் 30 ஆம் திகதி நடைபெற்றது.

119 தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெற்றது. இந்த தேர்தலில் காங்கிரஸ், பா.ஜ.க., பிஆர்எஸ் இடையே மும்முனைப் போட்டி நிலவியது.

இந்த நிலையில் இத்தேர்தலில், காங்கிரஸ் 64 தொகுதிகளில் வெற்றி பெற்று ஆட்சி அமைக்கிறது.

சந்திரசேகர ராவின் பி.ஆர்.எஸ். கட்சி 39 தொகுதிகளிலும், எம்.ஐ.எம் கட்சி 7 தொகுதிகளிலும், பா.ஜ.க. 8 தொகுதிகளிலும், காங்கிரஸ் கட்சியின் கூட்டணி கட்சியான இந்திய கம்யூனிஸ்ட் தான் போட்டியிட்ட ஒரு தொகுதியிலும் வெற்றி பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

தெலுங்கானா மாநில காங்கிரஸ் கட்சி தலைவர் ரேவந்த் ரெட்டி நேற்று முதல்வராகப் பதவியேற்றுக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. அதற்கு முன்னதாக கே.சி.ஆர். தனது முதல்வர் பதவியை முறைப்படி இராஜினாமா செய்தார்.

# கௌதம் அதானியின் நிகர சொத்து மதிப்பு 7 நாட்களில் 10 பில்லியன் டொலர் அதிகரிப்பு



இலங்கை உள்ளிட்ட பல நாடுகளில் முதலீடுகளை மேற்கொண்டுள்ள இந்தியாவின் அதானி குழுமத்தின் தலைவர் கௌதம் அதானியின் நிகர சொத்து மதிப்பு 7 நாட்களில் 10 பில்லியன் டொலர் அதிகரித்துள்ளது.

அதானி குழுமத்தின் தலைவர் கௌதம் அதானியின் நிகர சொத்து மதிப்பு 7 நாட்களில் மட்டும் 10 பில்லியன் டொலர் அதாவது இந்திய மதிப்பில் 83,000 கோடி ரூபா அதிகரித்துள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதற்கமைய, அவரது நிகர சொத்து மதிப்பு தற்போது 70.3 பில்லியன் டொலரை எட்டியுள்ளது.

சொத்து மதிப்பு கணிசமாக உயர்ந்துள்ளதையடுத்து, உலக செல்வந்தர்கள் பட்டியலில் கௌதம் அதானி 4 இடங்கள் முன்னேறி 16 ஆவது இடத்தை பிடித்துள்ளார்.

# மாநிலங்களவையில் பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பு

பிரதமர் நரேந்திர மோடி கையாளும் துறைகள் தொடர்பான கேள்விகள் மாநிலங்களவையில் ஒவ்வொரு வியாழக்கிழமையும் பட்டியலிடப்படுவதால், கேள்வி நேரத்தின்போது பிரதமர் மோடி பங்கேற்பது வழக்கம்.

மத்திய பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கர் ஆகிய 3 மாநில தேர்தலில் பா.ஜ.க. வெற்றி பெற்றது.

இந்த நிலையில் நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் தொடங்கிய பின்னர் முதல் முறையாக பிரதமர் மோடி நேற்று கேள்வி நேரத்தில் பங்கேற்க மாநிலங்களவைக்கு சென்றார்.

அப்போது ஆளும் பா.ஜ.க. உறுப்பினர்கள் கரவொலி எழுப்பியும் மேசையை தட்டியும் பிரதமருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.



# இஸ்ரேல் - ஹமாஸ் மோதலை முடிவுக்கு கொண்டுவர அனைத்து தலைவர்களும் ஒன்றிணைய வேண்டும்!

## - ரஷ்ய ஜனாதிபதி தெரிவிப்பு

இஸ்ரேல் –ஹமாஸ் மோதலையும், உக்ரைன் ரஷ்யா மோதலையும் முடிவுக்கு கொண்டு வருவதற்கு அனைத்து தலைவர்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் வலியுறுத்தியுள்ளார்.

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி மற்றும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் ஆகியோருக்கிடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பு ரஷ்ய தலைநகரான மொஸ்கோவில் நேற்று இடம்பெற்றதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ஹமாஸ் – இஸ்ரேல் தாக்குதல் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டதுடன், உயிரிழந்த பொதுமக்களுக்கு ஈரான் ஜனாதிபதி இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஈரானிய ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியுடனான பேச்சுக்கு முன்னர் ரஷ்ய ஜனாதிபதி சவுதி அரேபிய இளவரசர் மொஹமட் பின் சல்மானையும் சந்தித்திருந்தமை சுட்டிக் காட்டதக்கது.





# ஹமாஸ் அமைப்பினரின் ஆயுதக்கிடங்கை இஸ்ரேல் இராணுவம் கைப்பற்றியது!



இஸ்ரேல் – ஹமாஸ் யுத்தத்தின்போது ஹமாஸ் அமைப்பினர் பயன்படுத்திய பிரமாண்டமான ரொக்கெட் குண்டுகளை கைப்பற்றியுள்ளதாக இஸ்ரேல் இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் வைத்தியசாலை மற்றும் பாடசாலைகளுக்கு அருகில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. யுத்தத்தின்போது ஹமாஸ் அமைப்பினர் பயன்படுத்திய மிகப் பெரும் ஆயுதக்கிடங்கை கண்டுபிடித்துள்ளதாகவும், அதில் ரொக்கெட் குண்டுகள், ஏவுகணைகள், கையெறி குண்டுகள், ட்ரோன்கள் மற்றும் பிற ஆயுதங்களைக் கைப்பற்றியதாகக் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஹமாஸ் அமைப்பினர் பொதுமக்களை மனிதக் கேடயங்களாக பயன்படுத்தியதற்கான ஆதாரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

# இஸ்ரேல் - ஹமாஸ் போரில் இந்திய வம்சாவளி வீரர் பலி!

இஸ்ரேல் ஹமாஸ் இடையேயான போரில் உயிரிழந்தோர் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே வருகிறது.

இந்த நிலையில் இந்திய வம்சாவளியை சேர்ந்த இஸ்ரேல் இராணுவ வீரர் காஸா எல்லையில் நடைபெற்ற போரில் உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

ஆஷ்டோட்–ஐ சேர்ந்த 34 வயதான கில் டேனியல்ஸ் என்ற இந்தியரே கடந்த 5 ஆம் திகதி நடைபெற்ற போரில் உயிரிழந்துள்ளதோடு இவரின் இறுதி சடங்குகள் அவரின் சொந்த ஊரில் நடைபெற்றுள்ளது.



மேலும், காஸா எல்லையில் நடைபெற்ற சண்டையின் போது கில் டேனியல்ஸ் உடன் மேலும் இருவர் உயிரிழந்தனர் என இஸ்ரேல் பாதுகாப்பு துறை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இந்திய யூத பாரம்பரிய மையம் கருத்து தெரிவிக்கையில், ஒட்டு மொத்த இஸ்ரேலுக்காக களமிறங்கிய கொடூரமான போரில் இஸ்ரேல் பல இராணுவ வீரர்களை இழந்துள்ளது.

அந்த வகையில் இஸ்ரேல் பாதுகாப்பு படையை சேர்ந்த இராணுவ வீரர் மாஸ்டர் கில் டேனியல்ஸ் உயிரிழந்ததை எண்ணி வருந்துகிறோம்" என கூறியுள்ளது.





# பேசாலை வெற்றி நாயகி ஆலயத் திருவிழா

**(மன்னார் நிருபர்)**

மன்னார் பேசாலை புனித வெற்றி நாயகி ஆலய திருவிழா திருப்பலி இன்று (8) வெள்ளிக்கிழமை காலை காலை மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் இடம்பெற்றது. அருட்தந்தையர்கள் இணைந்து கூட்டுத் திருப்பலி யாக ஒப்புக் கொடுத்தனர்.

பேசாலை புனித வெற்றி நாயகி ஆலய திருவிழா கடந்த புதன்கிழமை (29) மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்து நவநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. நேற்று (7) வியாழக்கிழமை மாலை வேஸ்பர் ஆராதனை இடம்பெற்றது. இன்று வெள்ளிக்கிழமை (8) காலை திருவிழா திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

பேசாலை புனித வெற்றி நாயகி ஆலய பங்குத்தந்தை அருட்தந்தை எஸ்.அன்ரன் அடிகளாரின் ஏற்பாட்டில் மன்னார் மறை மாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் அருட்தந்தையர்கள் இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டுத் திருப்பலி யாக ஒப்புக் கொடுத்தனர்.

திருவிழா திருப்பலியை தொடர்ந்து திருச்சொரூப பவனியும், அதனைத் தொடர்ந்து ஆசியும் மன்னார் மறை ம ாவட்ட ஆயரால் பக்தர்களுக்கு வழங்கப்பட்டது.இதன் போது ஆயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.











# கட்டுப்பாட்டு விலையை மீறிப் பொருள்கள் விற்பனை செய்தோருக்கு எதிராக வழக்கு!

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

இரத்தினபுரி மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் கட்டுப்பாட்டு விலையை மீறி சீனி மற்றும் அரிசி ஆகியவற்றை கூடிய விலைக்கு விற்பனை செய்த 77 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

இரத்தினபுரி மாவட்டத்தில் இரத்தினபுரி, பலாங்கொட, பெல்மதுல்ல, எம்பிலிப்பிட்டிய கலவான மற்றும் இறக்குவான ஆகிய பகுதிகளில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் உத்தியோஸ்தர்கள் திடீர் சோதனை மேற்கொண்டனர். இதன்போது விலைப் பட்டியலை நுகர்வோருக்குக் காட்சிப்படுத்தாத மற்றும் கட்டுப்பாட்டு விலையை விடக் கூடுதலான விலைக்குச் சீனி மற்றும் அரிசி ஆகியவற்றை விற்பனை செய்த 77 வர்த்தகர்களுக்கு எதிராக அவ்வப் பிதேச நீதி மன்றங்களில் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன என்று இரத்தினபுரி மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் பிரதானி உதய நாமல்கம தெரிவித்தார்.

# மகனுக்குப் பேசி வைத்த சிறுமியை துஷ்பிரயோகம் செய்த தந்தை கைது!

**(ரஸீன் ரஸ்மின்)**

புத்தளம் – ஆனமடுவ, பெரியகுளம் பகுதியில் தனது மகனுக்கு திருமணம் செய்து வைப்பதற்காக எதிர்பார்த்திருந்த 16 வயதுடைய சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்ற சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்ட தந்தை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.



ஆனமடுவ, பெரியகுளம் பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கூலித் தொழில் செய்து வரும் தனது 18 வயது மகனுக்கு , 16 வயது நிரம்பிய சிறுமிக்கு 18 வயது நிறைவடைந்தவுடன் திருமணம் செய்து வைப்பதாக குடும்பத்தினர் தீர்மானித்திருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் 18 வயதுடைய இளைஞன் தான் திருமணம் செய்து கொள்ள எதிர்பார்த்து இருக்கும் அந்த சிறுமியைத் தனது வீட்டுக்கு அருகில் உள்ள வீட்டில் தங்க வைத்துள்ளார்.

அத்துடன், அந்த இளைஞனின் தாயும் கர்ப்பமாக இருந்ததால், தனது தாயை சில நாள்களாக மருத்துவ பரிசோதனைக்காக சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றுள்ளார்.

இந்த சமயத்தில் இளைஞனின் தந்தை, அந்த சிறுமியை பலமுறை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

தான் தொடர்ச்சியாக துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டமை தொடர்பில் சிறுமி, தான் திருமணம் முடிப்பதற்கு எதிர்பார்த்து இருக்கும் அந்த இளைஞரிடம் கூறியுள்ளார்.

பின்பு சம்பவம் பற்றி பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டதை அடுத்து, சந்தேக நபர் ஆனமடுவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் நேற்று (07) ஆனமடுவ நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது, அவரை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் ஆனமடுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அரச சாராயத்தைச் சட்டவிரோதமாக விற்றவருக்கு அபராதம் விதிப்பு

**( வி.ரி.சகாதேவராஜா)**

300 மில்லி லீற்றர் அரச சாராயத்தைச் சட்டவிரோதமாக விற்பனை செய்தமைக்கு 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

திருக்கோவில் பொலிஸ் பிரிவிலுள்ள ஒருவர் தங்கவேலாயுதபுரத்தில் 300 மில்லி லீற்றர் அரச சாராயத்தைச் சட்டவிரோதமாக விற்பனை செய்த குற்றச்சாட்டில் கல்முனை மதுவரி திணைக்கள பொறுப்பு அதிகாரி பிரசாந்த் அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று (7) வியாழக்கிழமை வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

சந்தேக நபர் குற்றத்தை ஏற்றுக் கொண்டதற்கு அமைவாக 50 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்த வேண்டும் என்றும் தவறினால் ஆறு மாதம் கடூழிய சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் அக்கரைப்பற்று மேலதிக நீதிவான் தெஸிமா கஜீவன் உத்தரவிட்டார்.

# கிண்ணியா பஸ் டிப்போவுக்கு எரிபொருள் நிரப்பும் நிலையம்

(கே. எ. ஹமீட்)

கிண்ணியா பஸ் டிப்போவில் எரிபொருள் நிரப்பும் நிலையம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு நாட்டின் பொருளாதாரப் பிரச்சினை காரணமாக அதனை நிர்மாணிக்க முடியாமல் இருந்தது.

மீண்டும் அதனைத் தொடங்குவதற்கு இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் அல்விஸ் நடவடிக்கை எடுத்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் எம். எஸ். தௌபீக்கை அவர் நேரில் சந்தித்து இதற்கான வேண்டுகோள் விடுத்தார். இந்த வேண்டுகோளை யடுத்து ஜனவரி மாதத்துக்குப் பிறகு இதற்கான வேலைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்பார் என்று அவர் உறுதியளித்துள்ளார்.







# மன்னார் சவேரியாரில் புத்தாக்கக் கண்காட்சி

(மன்னார் நிருபர்)

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் 2023 ஆம் ஆண்டுக்கான இயந்திர தொழில்நுட்பம் மற்றும் புத் தாக்க கண்காட்சி பாடசாலை அதிபர் அருட்சகோதரர் சந்தியாகு தலைமையில் நேற்று (07) வியாழக்கிழமை பாடசாலை பொது ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெற்றது.

புதிய தொழில் நுட்பங்களை மாண வர்கள் தேடி கற்று அதன் ஊடாக கல்வியை விருத்தி செய்யும் முகமாகவும் அதன் ஊடாக மாணவர்களின் எதிர்கா லத்தை விருத்தி செய்ய வேண்டும் என்ற நோக்குடனும் கண்காட்சி ஒழுங்கமைக் கப்பட்டது.

கண்காட்சி ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அருட்சகோதரர் ஸ்ரனிஸ்லாஸ், சிறப்பு விருந்தினராக மன்னார் வலய உதவி கல்வி பணிப்பாளர் (கணிதம்) நவனீதன் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப ஆசிரிய ஆலோசகர் ஞானசீலன், அக்கடமி இணைப்பாளர் மோகன் குரூஸ், ஓய்வு பெற்ற வலயக் கல்விப் பணிப்பாளர் சுகந்தி செபஸ்ரி யான், சட்டத்தரணி மடுத்தீன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கண்காட்சியில் 6 -12 வரையான வகுப்பு மாணவர்கள் உருவாக்கிய, கண்டுபிடித்த 100 மேற்பட்ட கருவிகள் மற்றும் புத்தாக்கப் பொருள்கள் காட்சிப் படுத்தப்பட்டிருந்தன.

அபிஷான் எனும் மாணவனால் கண்டுபிடிக்கப்பட்டு மாவட்ட, மாகாண ரீதியாக முதலிடம் பெற்ற Smart Bed எனும் கருவி பலராலும் பாராட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



